# தமிழ் நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம்

எண். 100, அண்ணா சாலை, கிண்டி, சென்னை- 600 032.
தொலைபேசி : 044- 22201337
மின்னஞ்சல் முகவரி : ombudsmanlocal@tn.gov.in

தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர், சென்னை- 600 032.
முன்னிலை : முனைவர் சோ. அய்யர், இ.ஆ.ப., (ஓ)
*******

முறையீட்டு மனு எண். **1019/2015**

ஆணை எண். **198/2016**

நாள் : **03/12/2016**

திரு கே. திருஞானம்,
தஞ்சாவூர்.

**– முறையீட்டு மனுதாரர்**

மாநகராட்சி ஆணையர்,
தஞ்சாவூர் மாநகராட்சி,
தஞ்சாவூர்.

**– எதிர் மனுதாரர்**

தஞ்சாவூர் மாநகராட்சி, வடக்கு வாசல், பழைய நெல்மண்டித் தெரு, அந்தோணியார் கோயில் சந்து முகவரியில் வசிக்கும் திரு K.திருஞானம் அவர்களது 30.09.2016 நாளிட்ட முறையீட்டுமனு இம்முறைமன்ற நடுவத்தில் பெறப்பட்டு 1019/2016 எண்ணிட்ட முறையீட்டு மனுவாகப் பதிவு செய்யப்பட்டது. மனுதாரரின் முறையீட்டு மனு பரிசீலிக்கப்பட்டு கீழ்க்காணும் ஆணை வெளியிடப்படுகிறது :-

**ஆணை**

தஞ்சாவூர் மாநகராட்சி, வடக்கு வாசல், பழைய நெல்மண்டித் தெரு, அந்தோணியார் கோயில் சந்து முகவரியில் வசிக்கும் திரு K.திருஞானம் அவர்கள் தான் வசிக்கும் அந்தோணியார் கோயில் சந்தை ஆக்கிரமித்து கட்டிடம் கட்டிவருவதாகவும், இது சம்பந்தமாக மாநகராட்சி ஆணையரை நேரில் சந்தித்து முறையீடு செய்தும் எந்தவித நடவடிக்கையும் எடுக்கவில்லையென்றும், பொதுமக்கள் பயன்படுத்தும் மேற்படி சந்து ஆக்கிரமிப்பு செய்யப்பட்டதை தடுக்கக்கோரி இம்முறைமன்ற நடுவத்தில் முறையீடு செய்துள்ளார்.

2. மனுதாரரின் முறையீடு சம்பந்தமாக உரிய அறிக்கையுடன் 04.11.2016 அன்று நடைபெறும் விசாரணைக்கு வருமாறு தஞ்சாவூர் மாநகராட்சி ஆணையர் அறிவுறுத்தப்பட்டார். தஞ்சாவூர் சட்டமன்றத் தேர்தலை முன்னிட்டு தன்னால் வரமுடியவில்லை என்று தெரிவித்து அம்மாநகராட்சி இளநிலைப் பொறியாளர் மற்றும் உதவிப் பொறியாளர் (திட்டம்) ஆகியோர் விசாரணைக்கு ஆஜராவதை ஏற்குமாறு தஞ்சாவூர் மாநகராட்சி ஆணையர் வேண்டியிருந்தார். அனுமதி அளிக்கப்பட்டது. மாநகராட்சி ஆணையர் தனது அறிக்கையில், இப்பொருள் தொடர்பாக மனுதாரரின் தமக்கை திருமதி வாசுகி அவர்களின் புகார் மீது மாநகராட்சியால் நடவடிக்கை எடுக்கப்பட்டதாகவும், அதன் அடிப்படையில் ஆக்கிரமிப்பு பகுதி அளவீடு செய்யப்பட்டு, குறியிடப்பட்ட பகுதி முழுவதும் 01.11.2016 அன்று அகற்றப்பட்டுவிட்டது எனவும் தெரிவித்துள்ளார். மேலும் இது சம்பந்தப்பட்ட புகைப்படங்களையும் சமர்ப்பித்துள்ளார். விசாரணைக்கு வருகை தந்த மாநகராட்சி அலுவலர்களிடம் ஆக்கிரமிப்பு அகற்றப்பட்டது குறித்து உறுதி செய்யப்பட்டது. மனுதாரரின் முறையீடு நிறைவேற்றப்பட்டுள்ள நிலையில், இந்நேர்வின் மீதான நடவடிக்கையை இத்துடன் முடித்துவைத்து இம்முறைமன்ற நடுவம் ஆணையிடுகிறது.

2016 ஆம் ஆண்டு டிசம்பர் திங்கள் 3– ஆம் நாள் என்னால் கையொப்பமிடப்பட்டு அலுவலக முத்திரையிட்டு இவ்வாணையிடப்படுகிறது.

--//ஒப்பம்//--
தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்

//ஆணைப்படி அனுப்பப்படுகிறது/

செயலாளர்.

பெறுநர்
திரு கே. திருஞானம்,
அந்தோணியார் கோயில் சந்து,
பழைய நெல்மண்டித் தெரு,
வடக்குவாசல்,
தஞ்சாவூர்.
(அலைபேசி 9445001657)

மாநகராட்சி ஆணையர்,
தஞ்சாவூர் மாநகராட்சி,
தஞ்சாவூர்.

/உண்மை நகல்/

செயலாளருக்காக.